# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C.No.228/2009

2024 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 01 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. மகாமுனி (அ.சா.10) | தொழில் | : காவல் ஆய்வாளர் (ஓய்வு) |
| த/பெ., க/பெ. | : திரு. மாரிமுத்து | வயது | : 74 |
| கிராமம் | : கொடைக்கானல் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | நாள் | : 01.10.2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

1-வது எதிரி முன்னிலையாகியுள்ளார்.

<u>முதல் விசாரணை :- (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். பழனி தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த சமயம் கடந்த 30.04.2004 அன்று 11.00 மணிக்கு மடத்துக்குளம் ரயில்வே காலனி, கணேசபுரத்தில் குடியிருக்கும், பாண்டி மகன் செல்வம் என்பவர் நிலையத்தில் ஆஜராகி எழுத்துமூலமான புகாரைக் கொடுத்தார். அதைப் பெற்று காவல் நிலையக் குற்ற எண்.330/2004 பிரிவு 394 இ.த.ச. படி

வழக்கு பதிவு செய்தேன். பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகாரையும் சேர்த்து பழனி நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன். நகல்களை சம்மந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு அனுப்பினேன். விசாரணைக்காக காவல் ஆய்வாளருக்கு ஒரு நகல் அனுப்பி வைத்தேன். என்னை ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார். காயம்பட்ட நபரை சிகிச்சைக்கு அனுப்பிவைத்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.12

<u>2–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் முதல் தகவல் அறிக்கை மட்டும் தான் பதிவு செய்தேன் என்றும், விசாரணை அதிகாரி அல்ல என்றும் சொன்னால் சரிதான். சம்பவ இடத்துக்கும், காவல் நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 6 கி.மீ இருக்குமா என்றால் இருக்கும். 1/2 மணி நேரத்தில் சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு வந்துவிட முடியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த முடிந்து 5–1/2 மணி நேரம் கழித்து தான் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான், அவர்கள் மில்லுக்குச் சென்று லாரியில் இருந்த லோடுகளை இறக்கிவிட்டு அதன்பின்னர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தார். காலதாமதத்திற்கான காரணத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. புகார் எங்கு வைத்து யாரால் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. பொய்யான புகாரின் அடிப்படையில் காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் பற்றி முழு விபரமும் தெரியாது என்றால் சரியல்ல.

**1–ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை தக்கவைத்துக்கொள்ளப்படுகிறது.**

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2024.10.01 17:02:41 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**